PMGG
යහ පාලනය සඳහා ජනතා සංවිධානය
நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்
PEOPLE'S MOVEMENT FOR GOOD GOVERNANCE

Head Office:
C.B.Cassim Mawatha, Beach Road, Kattankudy-06.
Phone: 065-2246396,
Website: www.pmgg.org
E-Mail: pmgg.org@gmail.com

24.12.2012

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்.)

## இலவச அப்பியாசக் கொப்பி விநியோகம் 2012

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக பல்வறு சமூக அபிவிருத்தி அரசியல் வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருவதனை தங்கள் அறிவீர்கள். ஆரம்பத்தில் மட்டக்களப்பு பிரதேசங்களை மையப்படுத்தியதாக வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருந்த எமது இயக்கம் தற்போது கிழக்கு மாகாணம் தழுவியதாக அவற்றை விரிபுபடுத்தியுள்ளது என்பதனை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். எமது சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முதன்மை பெறுகின்றன.

புலமைப் பரிசில் கொடுப்பனவுகள், முறையான கற்றலுக்கான வழிகாட்டி கருத்தரங்குகள், பின்தங்கிய பாடசாலைகளுக்கான ஆசிரிய வள ஒதுக்கீடுகள், பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான இலவச பயிற்சி வகுப்புக்கள் மற்றும் கல்விமையங்கள், ஆசிரியர் மாணவர்கள் கல்வி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக எமது கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அமைந்திருக்கின்றன. அந்தவகையில் வறிய மாணவர்களுக்கான இலவச அப்பியாசக்கொப்பி விநியோக வருடாந்த வேலைத்திட்டம் மிக முக்கியமான ஒன்றாகும்.

காத்தான்குடிப் பிரதேசத்தில் நாம் மேற்கொண்டிருந்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டே இந்த இலவச அப்பியாசக்கொப்பி விநியோகம் கடந்த 2009ம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்டது. நம் நாட்டின் இலவசக் கல்வி முறையினூடாக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் இலவசமாகக் கிடைக்கின்ற போதிலும், அப்பியாசக்கொப்பிகள் உள்ளிட்ட ஏனைய கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்து மாணவர்களுக்கு உரிய நேரத்தில் பெற்றுக் கொடுக்க முடியாமல் பெரும்பான்மையான பெற்றோர்கள் திணறுவதை நாம் காண்கிறோம். பாடசாலை ஆரம்ப நாட்களில் அப்பியாசக்கொப்பிகள் உள்ளிட்ட முறையான ஆயத்தங்கள் கிடைக்காமையினால் பல வறிய மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் தயக்கம் காட்டுவதனையும் இது அவர்களின் நீண்டகால கல்விப் பின்னடைவுகளுக்கு காரணமாகி விடுவதனையும் எமது ஆய்வுகள் சுட்டிக்காட்டியிருந்தன. எனவேதான் இலவச அப்பியாசக்கொப்பி விநியோகத்திட்டமொன்றினை எமது இயக்கம் கடந்த 2009ம் ஆண்டு தொடக்கி வைத்தது. கடந்த மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலமாக 2009ம் ஆண்டு 1000 மாணவர்களுக்கும் 2010ம் ஆண்டு 5500 மாணவர்களுக்கும் 2011ம் ஆண்டு 10000 மாணவர்களுக்கும் இலவச அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டன. இவ்விநியோகத்தில் முஸ்லிம் மாணவர்கள் மாத்திரமன்றி தமிழ் மாணவர்களும்

சிங்கள மாணவர்களும் உள்வாங்கப்பட்டிருந்தார்கள் என்பது விஷேட அம்சமாகும். அந்த வகையில் சமூகங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்குரிய ஒரு வேலைத்திட்டமாகவும் இது அமைந்திருக்கின்றது என்பதும் நாம் மகிழ்ச்சி கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும்.

கிழக்கு மாகாணத்தைத் தழுவியதாக மேற்கொள்ளப்படவிருக்கும் 2012ம் ஆண்டிற்கான இலவச அப்பியாசக்கொப்பி விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 27.12.2012 வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அல்லாஹ் நமது தூய பணிகளை, உயர்ந்த தியாகங்களை அங்கீகரிப்பானாக, நமக்கு நற்கூலிகளை வழங்குவானாக!

வஸ்ஸலாம்.

இவ்வண்ணம்

பொதுச்செயலாளர்,
நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்,
காத்தான்குடி.